**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

**STC. No: 564 of 2025**

**DATE : 06.01.2026**

**Depositions of witness for Prosecution**

**PW 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | ராஜ் | **Caste** | |
| **Father/ Husband's Name** | அருளப்பன் | **Calling** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of January 2026**

**(1ம் எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் வ. புதுப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை பார்த்து வந்தேன் தற்பொழுது உடல்நல குறைவு காரணமாக வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்து வருகிறேன். நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் எதிரியை எனக்கு தெரியும். வழக்கின் மற்றொரு எதிரியான வசீகரன் என்பவரையும் எனக்கு தெரியும். ஆஷா ஒன்று எனது மகன் ஆவார். கடந்த 07.04.2024 அன்று காலை சுமார் 11 மணியளவில் எனது மகனுக்கும் மருமகளுக்கும் இடையே இருந்தகருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில் சேர்ந்து வாழுமாறு வற்புறுத்தி சேசு என்ற ஆறுமுகம், அவரது மகன் நவீன், மச்சினன் சுரேஷ், அக்கா ரோஸ்மா என்ற லலிதா ஆகியோர்கள் சேர்ந்து கொண்டு சேசு என்பவர் பிடித்து கொள்ள நவீன் என்பவர் அருவாளால் எனது மகனை வெட்ட ஓங்கிய போது நான் கட்டையால் அவரை அடித்து

தடுத்துவிட்டேன். பின்னர் காலை 11.30 மணியளவில் வத்திராயிருப்பு காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம். அங்கே தேர்தல் நேரமாக இருப்பதால் மாலையில் வந்து விசாரிப்பதாக கூறிவிட்டார்கள். எவ்வாறு புகார் கொடுக்கலாம் என்று வழக்கின் எதிரிகள் மாலை 4.30 மணிக்கு எனது வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு கல்லை எறிந்தும், வெளியே வந்து பார்த்த என்னை எதிரி செல்வி விளக்கமாறை வைத்து அடித்தும், சத்தம் கேட்டு வெளியே தடுக்க வந்த எனது மகனை 1ம் எதிரி கட்டையால் தலையில் அடித்துவிட்டார். எனது மகன் மயங்கிவிட்டார்.

பின்னர் 1ம் எதிரி என்னை காலில் அடித்துவிட்டார். சம்பவத்தை அந்தோணியம்மான், ஞானசுந்தரி, ஜெபஸ்தியம்மாள் ஆகியோர்கள் விலக்கிவிட்டார்கள். காயமடைந்த எனது மகனை ஆட்டோவில் ஏற்றி நேரடியாக வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் சென்று தகவல் தெரிவித்துவிட்டு பின்னர் சிகிச்சைக்காக வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கே ஒரு வார காலம் சிகிச்சையல் இருந்தோம். காவல் நிலையத்தில் வைத்து எனது மகன் புகார் மனு கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

ஆஜர் எதிரி எனக்கு உறவினர் என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் மகளைத்தான் எனது மகன் திருமணம் செய்து உள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் எனது மகனுக்கும், மருமகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் தனித்தனியாக அவரவர் பெற்றோர் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது மருமகளிடம் இரண்டு பவுன் தங்க நகை வாங்கி வந்தால் மட்டும் தான் எனது மகனோடு சேர்ந்து வாழ அனுமதிப்பேன் என்றும் இல்லை என்றால் வாழ அனுமதிக்க மாட்டேன் என்று நான் கூறி பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எனது மகன் லாரி ஓட்டுனராக இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

வேலை முடித்து வரும்பொழுது எனது மகன் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வருவது வழக்கம் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற நேரத்தில் எனது மகன் மது போதையில் இருந்தார் என்றால் சரியல்ல. எனது வீடு தெற்கே பார்த்த வீடு என்று சொன்னால் சரிதான். தரைதளத்தில் இருந்து எனது வீட்டின் கட்டுமானம் 3 அடி உயரத்தில் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் எனது பேரனும் பேத்தையும் எனது மகனை பார்ப்பதற்காக வீட்டிற்கு வந்திருந்தார்கள் என்று சொன்னால் பேரன் எங்கள் வீட்டில் தான் இருந்து வருகிறார். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் எனது மகனை பார்க்க எனது வீட்டிற்கு வந்த பேரணையும் பேத்தியையும் வீட்டிற்குள் அனுமதிக்காமல், மருமகளிடமிருந்து இரண்டு பவுன் தங்க நகையை வாங்கி வந்தால் மட்டும் தான் அனுமதிப்பேன் என்று கூறினேன் என்று சொன்னால் சரியல்ல.

அதன் பின்னர்தான் எனது பேரன் மற்றும் பேத்திகள் வீட்டுக்கு சென்று எனது மருமகளையும், வசீகரணையும், தாயாரையும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அழைத்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எங்களுடைய கிராமத்தில் புறக்காவல் நிலையம் இருந்து வருகின்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எங்கள் கிராமத்தில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் உடனடியாக புறக்காவல் நிலையத்தில் தகவல் தெரிவிப்பது வழக்கம் என்று சொன்னால் சரிதான். புறக்காவல் நிலையத்திற்கு அருகில் தான் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல வழக்கின் எதிரிகள் என்னை தாக்கி இருந்தால் எங்கள் ஊரில் உள்ள புறக்காவல் நிலையத்தில் நான் உடனடியாக புகார் கொடுத்து இருப்பேன் என்று சொன்னால் புறக்காவல் நிலையத்தில் புகார் கொடுக்க முடியாது. ஏதேனும் சம்பவம் நடைபெற்றால் அது குறித்து தகவல் மட்டும் தான் தெரிவிக்க முடியும். புகார் கொடுக்க வேண்டுமேயானால் காவல் நிலையத்துக்கு செல்லுமாறு அனுப்பி விடுவார்கள்.

சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து புறக்காவல் நிலையத்தில் நான் ஏதேனும் தகவல் தெரிவித்தேனா

என்றால் தகவல் தெரிவித்தேன். புறக்காவல் காவல் நிலையத்திலிருந்து வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் வந்தால் எவ்வளவு நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சுமார் 20 நிமிடத்தில் வந்துவிடலாம். அதேபோல காவல் நிலையத்துக்கு வர வேண்டும் ஆனால் எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 15 நிமிடம் ஆகும். நேரடியாக காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த புகாரை எனது மகன் தான் கொடுத்தார். காலையில் நான் புகார் கொடுத்தேன். நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த 10 நிமிடத்தில் வழக்கின் எதிரிகள் காவல் நிலையத்திற்கு வந்து விட்டார்கள் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது அந்த சமயத்தில் நாங்கள் மருத்துவமனையில் இருந்தோம்.

நான் சொல்வது போல வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எனது மருமகளை எனது மகனுடன் சேர்ந்து வாழ விடக்கூடாது என்ற காழ்ப்புணர்ச்சியில், எனது மகன் தன்னிச்சையாக விழுந்து ஏற்பட்ட காயத்தினை, வழக்கின் எதிரிகள் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்பொழுது எனது மகனும், மருமகளும், பேரன் மற்றும் பேத்தி ஆகிய நால்வரும் ஒரே வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு